தலைவாசல் ஊராட்சி ஒன்றியம் , தலைவாசல் ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை. திரு.S.அசோக் (எ) ஆறுமுகம்,

ஊ.ந.க.எண்.1/2024 நாள்.12.04.2024

பொருள் வீட்டு மனைப்பிரிவு – வரைபட அனுமதி – தலைவாசல் ஊராட்சி ஒன்றியம் – தலைவாசல் ஊராட்சி நத்தக்கரை கிராம சர்வே எண் – **146/1B**-ல் அமைந்துள்ள **0.96** ஏக்கர் (அ) **3884.94** ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள 1 முதல் 17 வரை உள்ள மனைகளுக்கு அங்கீகாரம் வழங்கி ஒப்புதல் அளித்தல் – தொடர்பாக.

பார்வை
1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் சேலம் அவர்களின் கடித ROC No.SLM/C17XT19R/18643/2023/ 2024/TCP நாள்.19.03.2024.
2. தலைவாசல் சார்பதிவாளர் அலுவலகம் படிவம் (A) நன்கொடை மூலமாக மாற்றம் செய்ததற்கான பத்திர எண்கள். 482/2024 மற்றும் 483/2024 நாள்.14.02.2024.
3. தலைவாசல் ஊராட்சி மன்ற தீர்மான எண். 11(722) நாள்.01.03.2024.
4. சார்நிலை கருவூலத்தில் செலுத்திய E-Challan No.20240401003136 Date:01.04.2024, நிலப்பயன் மாற்ற கட்டணம், கூற்தாய்வு கட்டணம்.

,,,,,,,,,,,,

உத்திரவு.

சேலம் மாவட்டம், தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், தலைவாசல் ஊராட்சி நத்தக்கரை கிராம சர்வே எண் – **146/1B**-ல் அமைந்துள்ள **0.96** ஏக்கர் (அ) **3884.94** ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள திரு.E.N.சுரேஷ், என்பவர் மனைப்பிரிவு செய்துள்ளதற்கு பார்வை 1ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் சேலம் மாவட்டம் அவர்களின் கடித ROC No.SLM/C17XT19R/18643/2023/ 2024/TCP நாள்.19.03.2024ன் படி குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காணும் நில உரிமையாளர் மனைப்பிரிவுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகளை தலைவாசல் ஊராட்சிக்கும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்க்கு தானமாக தலைவாசல் சார்பதிவாளர் பத்திர பதிவு எண்கள்.482/2024 மற்றும் 483/2024 நாள்.14.02.2024 மூலம் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரர் தனது சொந்த பொறுப்பில் தார் சாலைகள் தெருவிளக்குகள், இருபுறங்களிலும் கழிவுநீர் வாய்க்கால் தரமாக அமைக்கப்பட்டுள்ளது.

பார்வை 4ல் காணும் நிலத்தின் வழிகாட்டு மதிப்பின்படி 3% தொகையினை சார்நிலை கருவூலத்தில் E-Challan No.20240401003136 Date:01.04.2024ன் படி செலுத்தியுள்ளார் மற்றும் நிலப்பயன் மாற்ற கட்டணம், கூற்தாய்வு கட்டணம் செலுத்தியுள்ளார்.

சேலம் மாவட்டம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித ROC No.SLM/C17XT19R/18643/2023/ 2024/TCPன்படி SWP/DTCP/SALEM/LAYOUT NO:68/2024 நாள்.19.04.2024ன் படியும் தொழில் நுட்ப அனுமதி மற்றும் வரைபட அனுமதி வழங்கியதை தொடர்ந்து மேற்கண்ட சர்வே எண்களில் 1 முதல் 17 வரை உள்ள மனைப்பிரிவுகளுக்கு தலைவாசல் ஊராட்சி மன்றத்தால் தீர்மானம் அங்கீகாரம் அளித்துள்ளதால் திரு.E.N.சுரேஷ், 6/688A, மயிலன்காட்டார் தோட்டம், தலைவாசல், தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம் என்பவருக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் கண்டுள்ளவாறு மனைப்பிரிவுகளை கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1.சேலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித ROC No.SLM/C17XT19R/18643/2023/2024/TCP நாள்.19.03.2024ன் படி தெரிவிக்கப்பட்ட 1 முதல் 17 வரை உள்ள மனைப்பிரிவுகள் மற்றும் தெருக்கள் SWP/DTCP/SALEM/LAYOUT NO:68/2024 என வரைபடத்தின் படி எல்லை கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்.

2.ஊராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்ட சாலைகளின் நிலங்களை வருவாய்துறை நில ஆவணங்களில் உட்பிரிவு செய்துதர வேண்டும் அதற்குண்டான கட்டணங்களை தாங்களே செலுத்த வேண்டும்.

3.பார்வை 1–காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கடிதத்தில் தெரிவித்த நிபந்தனைகள் மற்றம் மேற்கண்ட நிபந்தனைகளும் ஏற்றுக்கொண்டு பொதுவாக மனைப்பிரிவு சம்மந்தமான எந்த விதிகளையும் நிபந்தனைகளும் மீறக்கூடாது.

4.மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட மனையை வரைப்படத்தில் காட்டியுள்ளது போல உட்பிரிவு செய்து மனை நிலமாக விற்பனை செய்ய வேண்டும்.

5.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை மாற்றமும் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயில் 6 அடி X 4 என்ற அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக தெரிவிக்கப்பட வேண்டும்.

இணைப்பு – வரைபடம்.

12/4/24

ஊராட்சி மன்றத்தலைவர்,
தலைவாசல் ஊராட்சி.

தலைவர்
தலைவாசல் ஊராட்சி

பெறுதல்.

திரு.E.N.சுரேஷ்,
கதவு எண்– 6/688A,
மயிலன்காட்டார் தோட்டம்,
தலைவாசல்,
தலைவாசல் வட்டம்,
சேலம் மாவட்டம்.